TNRM050068222024



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**

**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.B.L.,(Hons)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 25-ம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.08/2025**

**(CNR.NO:TNRM05-006822-2024)**

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>தனுஷ்கோடி காவல் நிலையம்,<br>குற்ற எண்.82/2023 |

**1 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | ரிச்மன் டயஸ் |
| 3. | த/பெ | : | சார்ஸ் டயஸ் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | வன்னிமுந்தல், கலபட்டி, கன்டன்குழி அஞ்சல் புத்தலம் மாவட்டம், இலங்கை |
| 6. | வயது | : | 37/2023 |

**2 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | குருகுல சூரிய கிளாரன்ஸ் வாசிங்டன் பெர்னான்டோ |
| 3. | த/பெ | : | மார்கேஸ் பெர்னான்டோ |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | மணல் தோட்டம், கல்பட்டி, குந்தன்குழி அஞ்சல், புத்தலம் மாவட்டம், இலங்கை |
| 6. | வயது | : | 45/2023 |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:28:07 +0530

TNRM050068222024



**3 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சார்லஸ் தினேஷ் ஜீவந்த் |
| 3. | த/பெ | : | சார்லஸ் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | கல்பட்டைகேம், கல்பட்டி, கந்தன்குழி அஞ்சல், புத்தலம் மாவட்டம், இலங்கை |
| 6. | வயது | : | 34/2023 |

**4 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | அந்தோணி ரோக்சன் பெர்னாந்து |
| 3. | த/பெ | : | அருள் ஆனந்தன் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | அனவாசல், கல்பட்டி, புத்தலம், இலங்கை |
| 6. | வயது | : | 35/2023 |

**5 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சில்வஸ்டர் |
| 3. | த/பெ | : | சாத்குணதாஸ் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | சாந்தோணி நிவாஸ், கல்பிட்டி, கந்தன்குழி அஞ்சல், புத்தலம், இலங்கை |
| 6. | வயது | : | 43/2023 |

**6 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | வர்ணகுல சூரிய செபஸ்தியான் மில்ரோ பெர்னாந்து |
| 3. | த/பெ | : | அந்தோணி பெர்னாந்து |
| 4. | தொழில் | : | -- |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:28:13 +0530

| | | | |
|---|---|---|---|
| 5. | முகவரி | : | கல்பட்டைகேம், கல்பிட்டி, குந்தன்குழி அஞ்சல் புத்தலம் மாவட்டம், இலங்கை |
| 6. | வயது | : | 42/2023 |

**7 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | வர்ணகுல சூரிய பிரசாத் ரங்க குமார் |
| 3. | த/பெ | : | பாபா அந்தோணி தர்ம சேனே |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | சாந்தோணி நிவாஸ், கல்பிட்டி, கந்தன்குழி அஞ்சல், புத்தலம், இலங்கை |
| 6. | வயது | : | 40/2023 |

**8 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | வர்ணகுல சூரிய ஆதித்த அர்சநீல ஜுட் மெல்சன்லோக் |
| 3. | த/பெ | : | அந்தோணி லோக் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | ஏச்சன்கார்டு, கல்பிட்டி, கந்தன்குழி அஞ்சல், புத்தலம், இலங்கை |
| 6. | வயது | : | 41/2023 |

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 23.10.2023-ம் தேதி 13.35 மணி |
| 8. | புகார் தேதி | : | 23.10.2023-ம் தேதி 14.00 மணி |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1 முதல் 8 எதிரிகள் 24.10.2023 ம் தேதியன்று கைது செய்யப்பட்டுள்ளார்கள். |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 1 முதல் 8 எதிரிகள் 05.02.2024 ம் தேதியன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 26.04.2024 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 17.06.2025 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 08.06.2026 |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:28:19 +0530

| | | | |
|---|---|---|---|
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1 முதல் 8 எதிரிகள் மீது பிரிவுகள்.14(c) Foreigners Act 1946 மற்றும் 3(a) r/w 6(a) Passport (Entry Into India) Rules 1950 படி |
| 15. | வினவப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1 முதல் 8 எதிரிகள் மீது பிரிவுகள்.14 (c) Foreigners Act 1946 மற்றும் 3(a) r/w 6(a) Passport (Entry Into India) Rules 1950 படி |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | |

| முதல் விசாரணை | எதிரி தரப்பு குறுக்கு விசாரணை |
|---|---|
| அ.சா.1 – 24.06.2025 | அ.சா.1– 24.06.2025 |
| அ.சா.2– 28.07.2025 | அ.சா.2– 28.07.2025 |
| அ.சா.3– 28.07.2025 | அ.சா.3– 28.07.2025 |
| அ.சா.4 – 28.07.2025 | அ.சா.4 – 28.07.2025 |
| அ.சா.5 – 07.08.2025 | அ.சா.5 – 07.08.2025 |
| அ.சா.6 – 06.01.2026 | அ.சா.6 – 06.01.2026 |
| அ.சா.7 – 16.02.2026 | அ.சா.7 – 16.02.2026 |
| அ.சா.8 – 16.02.2026 | அ.சா.8 – 16.02.2026 |

| | | | |
|---|---|---|---|
| 18. | எதிரிகளிடம் பிரிவு 313(i)(b) Crpc/ 351(i)(b) BNSS படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 15.04.2026 |
| 19. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரிகள்/ குற்றமுறையிட்டாளார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) | : | இல்லை |

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.06.25 19:28:27 +0530

| | | | |
|---|---|---|---|
| | BNSS பிரிவின் படியான மனுக்கள் | | |
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.மணிசங்கர் |
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.T.மாரிமுத்து |
| 25. | எதிரியின் கூற்று | : | எதிரிகள் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 25.06.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 25.06.2026 |
| 28. | நீதிபதியின் முடிவு | : | **முடிவாக,**<br>**i) 1 முதல் 8 எதிரிகள் பிரிவு 14 (c) Foreigners Act 1946–ன் கீழான குற்றத்திற்கு மூன்று மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் மற்றும் தலா ரூ.2000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் 1 வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.**<br>**ii) மேலும், 1 முதல் 8 எதிரிகள் பிரிவுகள்.3(a) r/w 6(a) Passport (Entry Into India) Rules 1950–ன் கீழான குற்றத்திற்கு மூன்று மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.**<br>**iii) மேற்சொன்ன தண்டனை காலத்தை 1 முதல் 8 எதிரிகள் ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் 1 முதல் 8 எதிரிகள் கடந்த 25.10.2023 முதல் 05.02.2024 வரை 104 நாட்கள் நீதிமன்றக் காவலில் இருந்துள்ளார்கள். 1 முதல் 8 குற்றவாளிகள் ஏற்கனவே சிறையிலிருந்த காலத்தை தண்டனைக் காலத்திலிருந்து கழித்துக் கொள்ள 428 குவிமுச–ன் கீழ்** |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:28:34 +0530

TNRM050068222024



**அனுமதிக்கப்படுகிறது. வழக்கின் 1 முதல் 8 எதிரிகள் இலங்கை பிரஜை என்பதால் அவர்கள் வேறு குற்ற வழக்கிற்கு தேவைப்படாத பட்சத்தில் இலங்கை நாட்டிற்கு அனுப்பும் வரை 1 முதல் 8 எதிரிகளை திருச்சி சிறப்பு அகதிகள் முகாமில் தங்க வைத்திருக்க உத்தரவிடப்படுகிறது.**

**இவ்வழக்கில் PR.No.105/2024-ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சொத்துக்களான அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள Item.No.1 - OFRP-A-8021 PTM என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு - 1, Item.No.2 - OFRP-A-5512 PTM என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு - 1, Item.No.3 - OFRP-A-5895 என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு - 1, Item.No.4 - OFRP-A-7706 என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு - 1 மற்றும் குறீயீடு செய்யப்படாத வழக்குச்சொத்துக்களான Item.No.5 - GPS 12 (Model Gramin) - 2, Item.No.6 - GPS 12 H (Model Gramin) - 2, Item.No.7 - GPS 72H (Model Gramin) - 1, Item.No.8 - Mobile Phone (Model Nokia) - 3, Item.No.9 - Mobile Phone (Model KGTEL) - 1 ஆகியவைகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அரசுக்கு ஆதாயம் சேர்க்க உத்தரவிடப்படுகிறது.**

இவ்வழக்கு 04.01.2025 தேதியன்று குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் (இனி கீழ் வரும் இடங்களில் **குவிமுச** என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 8 குற்றம்சாட்டப்பட்டவர்கள்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:28:44 +0530

தரப்பில் வழக்கறிஞர் திரு.T.மாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

கடந்த 23.10.2023ம் தேதியன்று இந்திய கடலோரக் காவல் படை மற்றும் சுங்கத்துறையினருக்கு இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தல் நடக்க இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் இந்திய கடல் எல்லைக்குள் ரோந்து அலுவலில் இருந்தபோது சுமார் 13.35 மணியளவில் சர்வதேச கடல் எல்லையில் இருந்து சுமார் 12 நாட்டிகல் மைல்கள் தொலைவில் இந்திய கடல் எல்லைக்குள் கடலோர காவல் படையின் படகு நிலை கொண்டிருந்தபோது சுமார் 13.35 மணியளவில் சர்வதேச கடல் எல்லையின் இலங்கை பகுதியில் இருந்து 4 நாட்டு மீன்பிடி படகுகள் மூலமாக இவ்வழக்கின் 1 முதல் 8 எதிரிகள் படகுக்கு 2 பேர் வீதம் அதிவேகமாகவும் சட்டவிரோதமாகவும் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து இந்தியாவில் சட்ட விரோத செயலில் ஈடுபடுவதற்காக எந்த ஒரு அரசு அனுமதி மற்றும் உரிமம் இல்லாமல் நுழைந்துள்ளார்கள். மேலும் அங்கு TN 11 MO 1097 என்ற பதிவெண் கொண்ட UWAIS என்று பெயரிடப்பட்ட இந்திய படகில் உள்ள சுமார் 330 கிலோ கிராம் பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் 594 கி.கி. எடையுள்ள மஞ்சள் ஆகியவற்றை பெறுவதற்காக 1 முதல் 8 எதிரிகள் இந்திய எல்லைக்குள் இலங்கை நாட்டு மீன்படகுகளில் நுழைந்ததன் மூலமாகவும் இலங்கையின் கடவுச்சீட்டு இல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்கள் வாயிலாக நுழையாமலும் 1 முதல் 8 எதிரிகள் சட்டவிரோதமான உள்நுழைந்தது பிரிவு 14(C) Foreigners Act 1946 & 3(a) r/w 6(a) Passport (Entry into India) Rules, 1950 ன்கீழ் கண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக தனுஷ்கோடி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களால் குற்றம் சாட்டப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

SUJITH Digitally signed by SUJITH
Date: 2026.06.25 19:28:56 +0530

2. மேற்சொன்ன குற்ற இறுதி அறிக்கை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 1 முதல் 8 எதிரிகள் குற்றம் புரிந்ததற்கான முகாந்திரம் மற்றும் முதல் நோக்க வழக்கு அமையப்பெற்றுள்ளதாக தீர்மானித்து பிரிவு 14(C) Foreigners Act 1946 & 3(a) r/w 6(a) Passport (Entry into India) Rules, 1950 குற்றச்சாட்டுகளுக்காக இந்நீதிமன்றம் மேற்சொன்ன வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. 1 முதல் 8 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதின்பேரில் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டு பிரிவு 230 BNSS–ன் கீழ் எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

3. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு எதிரிகள் குற்றம் புரிந்ததற்கான முகாந்திரம் இருப்பதாகவும் முதல்நோக்க வழக்கு அமையப்பெற்றுள்ளதாக தீர்மானித்து பிரிவு 14(C) Foreigners Act 1946 & 3(a) r/w 6(a) Passport (Entry into India) Rules, 1950 –ன்கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு பிரிவு 263 BNSS –ன்கீழ் எதிரிகளிடம் குற்றச்சாட்டு விளக்கி வினவியபோது 1 முதல் 8 எதிரிகள் குற்றச்சாட்டை பொய்வழக்கு என்று மறுத்துரைத்தார்கள். எனவே பிரிவு 265 BNSS–ன் கீழ் அரசுதரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4. அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையான ஆவணங்களும் அ.சா.பொ. 1 முதல் அ.சா.பொ.4 வரையான சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2 முதல் அ.சா.4 ஆகியோர்கள் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் மற்றும் அ.சா.5 எதிரிகளை நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தியது மற்றும் வழிகாவல் தொடர்பான சாட்சி அ.சா.6 முதல் அ.சா.8 ஆகியோர்கள் வழக்கின் விசாரணை அதிகாரிகள்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:29:05 +0530

**அரசுதரப்பு சாட்சிகளின் சுருக்கம்:**

அ.சா.1 அகில்பதான் என்பவர் தனது சாட்சியத்தில் இந்திய கடல் எல்லையில் ரோந்து மேற்கொண்டபோது 1 முதல் 8 எதிரிகள் எவ்வித ஆவணங்களும் இன்றி கடல் எல்லைக்குள் நுழைந்தது தொடர்பாகவும் கடல் அட்டைகள் மற்றும் மஞ்சள் ஆகியவை இந்திய படகில் இருந்து எதிரிகள் வந்த 4 பைபர் படகுகளுக்கு மாற்றம் செய்ய இருந்தது தொடர்பாகவும் இந்திய படகு மற்றும் அதில் இருந்த 4 நபர்களை சுங்கத்துறையினரிடம் ஒப்படைத்து 1 முதல் 8 எதிரிகளை நடவடிக்கைக்காக அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்தது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 கருணாநிதி மற்றும் அ.சா.3 குமார் ஆகியோர்கள் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பாகவும் அதன் அடிப்படையில் எதிரிகளிடம் இருந்து அ.சா.4 நவநீதன் முன்பாக 4 பைபர் இலங்கை படகுகள், 5 திசை காட்டும் கருவிகள் மற்றும் 4 செல்போன்கள் ஆகியவை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது தொடர்பாகவும் அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.4 நவநீதகிருஷ்ணன் மேற்சொன்ன வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதற்கு சாட்சியாக இருந்ததாகவும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 முகமது தாரிக்குல் அமீன் என்பவர் எதிரிகளை நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தி வழிகாவலுக்கு அழைத்துச் சென்றது தொடர்பாகவும், அப்போது 4வது எதிரிக்கு ஏற்பட்ட கை வீக்கம் தொடர்பாக ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் ஒப்படைத்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 சாகித் இஸ்ஹாக் என்பவர் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் குறிப்பாணை அடிப்படையில் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் இருந்து மாறுதல் ஆகி வந்த வழக்கு தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7 கனகராஜ் என்பவர் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில்

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.06.25 19:29:13 +0530

வழக்கு பதிவு செய்து எதிரிகளை கைது செய்து 1ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.8 முருகேசன் என்பவர் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை தனுஷ்கோடி காவல் நிலைய குற்ற எண் 82/2023 என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டது தொடர்பாகவும் படிவம் 91 மூலமாக நீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்களை ஆஜர்படுத்தி 1 முதல் 8 எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

## Questioning U/s.313(i)(b) Crpc

6. அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களில் இருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து பிரிவு 351 BNSS–ன் கீழ் விளக்கி வினவியபோது அரசுதரப்பு சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்றும் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

## இருதரப்பு வாதங்கள்

7. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 தனது புகார் மனுவில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிடாத நிலையில் முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டது முரண்பாடு என்றும் புகார் மனுவில் தேதியானது தட்டச்சு செய்யப்படாமல் எழுதப்பட்டுள்ளதாகவும் சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடல் எல்லை மற்றும் இலங்கை கடல் எல்லையை அடையாளங்கள் ஏதும் இல்லாத நிலையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிட்டார். புலன்விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் கடல் அட்டைகள், மஞ்சள் ஏதுவும் இவ்வழக்கு எதிரிகளிடம் கைப்பற்றப்படவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவை அரசுதரப்பில்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:29:20 +0530

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே 1 முதல் 8 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டார்.

**Point for determination**

**8. இந்நிலையில் 1 முதல் 8 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பிரிவு 14(C) Foreigners Act 1946 & 3(a) r/w 6(a) Passport (Entry into India) Rules, 1950 ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே இந்த வழக்கில் தீர்மாணிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

9. இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 அக்கில் பதான் என்பவர் மூலமாக ரோந்து பணி மேற்கொள்ளப்பட்டதும் 1 முதல் 8 எதிரிகள் இந்திய கடல் எல்லைக்குள் அ.சா.1 முதல் அ.சா.4 பைபர் படகுகள் மூலம் நுழைந்ததும் அவர்கள் இந்திய பைபர் படகில் உள்ள 300 கிலோ கடல் அட்டைகள், 594 கிலோ மஞ்சள் ஆகியவற்றை பெறுவதற்காக இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததும் 1 முதல் 8 எதிரிகளை மண்டபம் கடற்கரை அதிகாரிகளிடமும், இந்திய படகு மற்றும் 4 நபர்கள் மற்றும் கடல் அட்டைகள், மஞ்சள் ஆகியவைகள் சுங்கத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது தொடர்பாக நம்பகத்தன்மை வாய்ந்த வகையிலும் அ.சா.ஆ.1 அறிக்கையில் உள்ள சங்கதிகளும் உறுதி செய்யும் வகையிலும் தெளிவாக ஒத்திசைந்து சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும் இந்திய எல்லைக்குள் 1 முதல் 8 எதிரிகள் வந்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

10. எதிரிகள் தரப்பில் கடல் எல்லையில் இந்திய கடல் பகுதி என்பதற்கு அடையாளங்கள் ஏதும் இல்லை என்று கேள்விகள் கேட்கப்பட்டதற்கு கனிணியில் இந்திய–இலங்கை எல்லை தொடர்பான பதிவுகள் இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:29:32 +0530

இவ்வழக்கின் 1 முதல் 8 எதிரிகளிடம் இருந்து 5 ஜி.பி.எஸ் கருவிகள் மற்றும் 4 செல்போன்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. பொதுவாக மீனவர்களிடம் எல்லைகள் தொடர்பான பதிவுகள் மற்றும் இருப்பிடம் காட்டும் கருவி வைத்திருப்பதன் மூலமாக இந்திய–இலங்கை கடல் எல்லைகளை சரிவர அடையாளம் கண்டுகொள்ள இயலும் என்று இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே எதிரிகள் தரப்பில் கடல் எல்லையில் அடையாளங்கள் இல்லாததால் இந்திய கடல் எல்லைக்குள் 1 முதல் 8 எதிரிகள் நுழைந்துவிட்டதாக வாதிடப்பட்டது ஏற்றுக்கொள்ள இயலாது. மேலும், அ.சா.1 புகார் மனுவில் 24 என்ற எழுத்துக்கள் தேதியில் எழுதப்பட்டு மற்ற எழுத்துக்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது காரணமாக மட்டும் அ.சா.ஆ.1 புகார் மனுவை முழுவதுமாக நிராகரிக்க இயலாது.

11. அ.சா.2 கருணாநிதி மற்றும் அ.சா.3 குமார் ஆகியோர்கள் மூலமாக 1 முதல் 8 எதிரிகள் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதும் 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதன் அடிப்படையில் 4 படகுகள், 5 ஜிபிஎஸ். கருவிகள் மற்றும் 4 செல்போன்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாகவும், அத்தாட்சியில் சாட்சியாக கையொப்பம் செய்தது தொடர்பாக தெளிவான வகையில சாட்சியம் அளித்ததாக அளித்துள்ளார்கள். அவர்களது சாட்சியங்கள் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா.7 கனகராஜ் என்பவர் அளித்த சாட்சியங்களுடன் ஒத்திசைந்து செல்கிறது. எனவே 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான அ.சா.ஆ.6 மூலமாக அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.4 மற்றும் ஜிபிஎஸ். கருவிகள், செல்போன்கள் அ.சா.ஆ.7 அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டது சந்தேகத்திற்கிடமின்றி இந்நீதிமன்றத்தில் நிரூபனம் செய்யப்பட்டுள்ளது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:29:41 +0530

12. அ.சா.4 நவநீதகிருஷ்ணன் என்பவர் மேற்சொன்ன வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக உறுதிபட சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் அ.சா.ஆ.1 புகார் மனு அறிக்கையில் எதிரிகளின் பெயர் குறிப்பிடப்படாத நிலையில் அ.சா.ஆ.5 மண்டபம் மரைன் காவல் நிலைய குற்ற எண் 31/2023 முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது. இது குறித்து அ.சா.7 கனகராஜ் என்பவரது குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்கப்பட்டபோது எதிரிகள் குறித்து முழுமையான விபரம் தெரியாததால் கடலோர பாதுகாப்பு குழுமத்தில் விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர்சேர்க்கப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளது ஏற்கத்தக்கவகையிலான விளக்கம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. அ.சா.8 முருகேசன் என்பவர் மூலமாக தனுஷ்கோடி காவல் நிலையக் குற்ற எண் 87/2023 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது தொடர்பாகவும் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது தொடர்பாகவும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது தொடர்பாக அரசுதரப்பு சாட்சியங்களை ஒத்திசைந்து சாட்சியம் அளிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கு எதிரிகளிடம் கடல் அட்டைகள் அல்லது மஞ்சள் கைப்பற்றப்படவில்லை என்று வாதிடப்பட்டது. அரசுதரப்பு வழக்கானது இந்தியப்படகில் 4 நபர்கள் கடல் அட்டைகள், மஞ்சள் ஆகியவற்றை 1 முதல் 8 எதிரிகள் வந்த பைபர் படகில் கடத்துவதற்காக இருந்தபோது எதிரிகள் கைது செய்யப்பட்டதாக அமையப்பெற்றுள்ளது. அ.சா.1 தனது சாட்சியத்தில் மேற்சொன்ன இந்திய படகு மற்றும் அதில் வந்த 4 நபர்கள் மற்றும் கடல் அட்டைகள், மஞ்சள் ஆகியவற்றை சுங்கத்துறையினரிடம் ஒப்படைத்து விட்டதாகவே கூறியுள்ளார். எனவே கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டு இவ்வழக்கின் 1 முதல் 8 எதிரிகள் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்ததாகவே குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே 1 முதல் 8 எதிரிகளிடம் கடல் அட்டைகள் மற்றும் மஞ்சள் கைப்பற்றப்படாததற்கான காரணங்கள்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:29:52 +0530

அரசுதரப்பில் தகுந்த வகையில் விளக்கப்பட்டுள்ளது. எனவே எதிரிதரப்பு வாதம் ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்றாகும்.

14. எனவே மேற்கண்ட பரிசீலனையின்படி அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சியங்கள் வாயிலாக வழக்கு சம்பவங்கள் குறித்தும் புகார் கொடுக்கப்பட்டது, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுல் மகஜர் தொடர்பாக அ.சா.2 முதல் அ.சா.4, மற்றும் அ.சா.7 ஆகியோர்களின் சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. புலன்விசாரணை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது தொடர்பாக அ.சா.7 மற்றும் அ.சா.8 சாட்சியங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் எவ்வித அனுமதியும் இன்றி அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.4 வரையிலான பைபர்படகுகளில் வந்துள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

15. இவ்வழக்கில் 1 முதல் 8 எதிரியானவர்கள் காற்றின் வேகத்தால் வழிமாறி இந்திய எல்லைக்குள் எதிரிகள் தரப்பில் எவ்வித வாதமும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் 1 முதல் 8 எதிரிகள் சார்பாக எவ்வித சாட்சிகளோ சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை. 1 முதல் 8 எதிரிகள் இந்திய கடல் எல்லைக்குள் எவ்வித ஆவணங்களும் இன்றி நுழைந்ததும் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இந்திய எல்லைக்குள் நுழைவதற்கான ஆவணங்கள் உள்ளதாக எடுத்துரைக்கப்படவில்லை.

16. பிரிவு 2(a) Foreigners Act 1946–ன்படி இந்திய குடிமகன் அல்லாத ஒருவர் அயல்நாட்டினர் என்ற வரையறைக்குள் வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 1 முதல் 8 எதிரிகள்இலங்கை நாட்டை சேர்ந்த குடிமகன்

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:29:59 +0530

ஆவார்கள். எனவே அவர்கள் அயல்நாட்டினர் என்ற வரையறைக்குள் வருகிறார்கள். மேலும் பிரிவு 3(1) Foreigners Act 1946–ன்படி மத்திய அரசு இந்தியாவிற்குள் அயல்நாட்டினர் நுழைவது அல்லது வெளியேறுவது அல்லது அவர்கள் இந்தியாவில் தொடர்ந்து இருப்பதை தடை செய்வதற்காகவோ, ஒழுங்குபடுத்துவதற்காகவோ உத்தரவிடலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி பிரிவு 3(2)(a)வின்கீழ் இந்தியாவிற்குள் அயல்நாட்டினர் நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் இந்திய கடல் எல்லைக்குள் எவ்வித அனுமதியோ அரசு ஆவணங்களோ இல்லாமல் பைபர் படகுகள் மூலம்வந்துள்ளது சாட்சியஙகள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரிகளின் செய்கையானது பிரிவு 14 (C) Foreigners Act 1946 –ன் கீழ் அந்த சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள பிரிவுகளை மீறும் வகையில் முரண்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. மேலும் 1 முதல் 8 எதிரிகள் இலங்கை கடவுச்சீட்டு இல்லாமலும் இந்திய நாட்டில் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்கள் வாயிலாக இந்திய கடல் எல்லைக்குள் அல்லது இந்தியாவிற்குள் நுழையாமல் அரசு அனுமதி இன்றி சர்தேச கடல் எல்லையில் இலங்கை நாட்டு மாாக்கத்தில் இருந்து இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்ததன் மூலமாக பிரிவு 3(a) Passport (Entry into India) Rules, 1950 ன்கீழான விதிமுறைகளுக்கு முரண்பட்டுள்ளதும் அவ்வாறு செயல்பட்டது பிரிவு 6(a) Passport (Entry into India) Rules, 1950 ன்படி தண்டிக்கத்தக்க குற்றத்தை புரிந்துள்ளதும் அரசுதரப்பில் தகுந்த சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. எனவே, 1 முதல் 8 எதிரிகள் பிரிவுகள்.14 (c) Foreigners Act 1946 மற்றும் 3(a) r/w 6(a) Passport (Entry Into India) Rules 1950 படி குற்றவாளிகள் என தீர்மானிக்கப்படுகிறது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:30:06 +0530

**19. <u>தண்டனை குறித்து கேள்வி</u>**

முடிவாக, 1 முதல் 8 எதிரிகள் பிரிவுகள்.14 (c) Foreigners Act 1946 மற்றும் 3(a) r/w 6(a) Passport (Entry Into India) Rules 1950 படி குற்றவாளிகள் என தீர்மானித்து குற்றத்திற்கான தண்டனை குறித்து கேள்வி கேட்கப்பட்டது. ***"நாங்கள் பிழைப்பிற்காக இந்த தவறை செய்து விட்டோம். எங்களது குடும்பம் மற்றும் குழந்தைகள் இலங்கையில் உள்ளார்கள். மீண்டும் எவ்வித குற்றமும் புரிய மாட்டோம் என்றும் குறைந்தபட்ச தண்டனை கொடுத்து இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டும்"*** என்று கூறினார்கள்.

**20. <u>நன்னடத்தை சட்டம்.</u>**

1 முதல் 8 எதிரிகளுக்கு பிரிவு.360 குவிமுச அல்லது நன்னடத்தை கண்காணிப்பு சட்டத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்க இந்நீதிமன்றம் முன்வரவில்லை. அதேவேளையில் எதிரிகளின் வயது மற்றும் குடும்ப சூழலையும், 1 முதல் 8 எதிரிகள் இலங்கை நாட்டைச் சேர்ந்த குடிமகன்கள் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் 1 முதல் 8 எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் திருச்சி சிறப்பு முகாமில் போலீசார் கண்காணிப்பிலும், தங்களது உறவுகளிடம் பேச இயலாமலும், வெளியில் நடமாட இயலாமலும், தற்போது வரை இருந்து வருவதாக சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, 1 முதல் 8 எதிரிகளுக்கு தண்டனைக் காலத்தை முடிவு செய்வதில் மேற்சொன்ன சங்கதிகளை கருத்தில் கொள்வது நீதிப் பரிபாலனைக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, 1 முதல் 8 எதிரிகளுக்கு மேற்சொன்னவற்றை கருத்தில் கொண்டு குறைந்த பட்ச தண்டனை வழங்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:30:13 +0530

21. முடிவாக,

i) 1 முதல் 8 எதிரிகள் பிரிவு 14 (c) Foreigners Act 1946–ன் கீழான குற்றத்திற்கு மூன்று மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் மற்றும் தலா ரூ.2000/– அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் 1 வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

ii) மேலும், 1 முதல் 8 எதிரிகள் பிரிவுகள்.3(a) r/w 6(a) Passport (Entry Into India) Rules 1950–ன் கீழான குற்றத்திற்கு மூன்று மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

iii) மேற்சொன்ன தண்டனை காலத்தை 1 முதல் 8 எதிரிகள் ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது.

**22. <u>பிரிவு 428 குவிமுச</u>**

இவ்வழக்கில் 1 முதல் 8 எதிரிகள் கடந்த 25.10.2023 முதல் 05.02.2024 வரை 104 நாட்கள் நீதிமன்றக் காவலில் இருந்துள்ளார்கள். 1 முதல் 8 குற்றவாளிகள் ஏற்கனவே சிறையிலிருந்த காலத்தை தண்டனைக் காலத்திலிருந்து கழித்துக் கொள்ள 428 குவிமுச–ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. வழக்கின் 1 முதல் 8 எதிரிகள் இலங்கை பிரஜை என்பதால் அவர்கள் வேறு குற்ற வழக்கிற்கு தேவைப்படாத பட்சத்தில் இலங்கை நாட்டிற்கு அனுப்பும் வரை 1 முதல் 8 எதிரிகளை திருச்சி சிறப்பு அகதிகள் முகாமில் தங்க வைத்திருக்க உத்தரவிடப்படுகிறது.

**23. <u>சொத்து குறித்து உத்தரவு</u>**

இவ்வழக்கில் PR.No.105/2024–ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சொத்துக்களான அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள Item.No.1 – OFRP–A–8021 PTM என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு – 1, Item.No.2 – OFRP–A–5512 PTM என்ற பதிவெண் கொண்ட இலங்கை

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:30:19 +0530

நாட்டு மீன்பிடி பைபர் படகு – 1, Item.No.3 – OFRP–A–5895 என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு – 1, Item.No.4 – OFRP–A–7706 என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு – 1 மற்றும் குறீயீடு செய்யப்படாத வழக்குச்சொத்துக்களான Item.No.5 – GPS 12 (Model Gramin) – 2, Item.No.6 – GPS 12 H (Model Gramin) – 2, Item.No.7 – GPS 72H (Model Gramin) – 1, Item.No.8 – Mobile Phone (Model Nokia) – 3, Item.No.9 – Mobile Phone (Model KGTEL) – 1 ஆகியவைகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அரசுக்கு ஆதாயம் சேர்க்க உத்தரவிடப்படுகிறது.

**24. தீர்ப்பு நகல்**

எதிரிகளுக்கு இலவசமாக தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.

**25. மேல்முறையீட்டு உரிமை**

தண்டனை தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கான உரிமை குறித்து குற்றவாளிக்கு தெரிவிக்கப்பட்டது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:30:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

i) **அரசுத் தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | அகில்பதான் |
| அ.சா.2 | – | கருணாநிதி |
| அ.சா.3 | – | குமார் |
| அ.சா.4 | – | நவநீதகிருஷ்ணன் |

TNRM050068222024



| | | |
|---|---|---|
| அ.சா.5 | – | முகமது தாரிக் அமீன் |
| அ.சா.6 | – | சாகித் இஸ்ஹாக் |
| அ.சா.7 | – | கனகராஜ் |
| அ.சா.8 | – | முருகேசன் |

**(ii) <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.10.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 24.10.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 24.10.2023 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 25.11.2023 | தனுஷ்கோடி காவல் நிலைய குற்ற எண்.82/2023 முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 24.10.2023 | மண்டபம் மெரைன் காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை அசல் |
| அ.சா.ஆ.6 | 24.10.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியான "என்னை கூட்டிச் சென்றால் எங்களது 4 பைபர் படகுகளையும், 5 ஜிபிஎஸ் கருவிகளுடன் இலங்கை சிம் கார்டுகளுடன் கூடிய 4 செல்போன்கள் அடையாளம் காட்டி என்ற பகுதி |
| அ.சா.ஆ.7 | 24.10.2023 | மண்டபம் மெரைன் காவல் நிலைய அத்தாட்சி |
| அ.சா.ஆ.8 | 24.10.2023 | மண்டபம் மெரைன் காவல் நிலைய படிவம் 95 |
| அ.சா.ஆ.9 | 11.03.2024 | தனுஷ்கோடி காவல் நிலைய அத்தாட்சி |
| அ.சா.ஆ.10 | 11.03.2024 | தனுஷ்கோடி காவல் நிலைய படிவம் 91 |

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:30:36 +0530

**iii) குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

இல்லை

**iv) அரசுத் தரப்பு சான்றுப்பொருள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1 | 24.10.2023 | OFRP–A–8021 PTM என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு – 1 |
| அ.சா.பொ.2 | 24.10.2023 | OFRP–A–5512 PTM என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு – 1 |
| அ.சா.பொ.3 | 24.10.2023 | OFRP–A–5895 என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு – 1 |
| அ.சா.பொ.4 | 24.10.2023 | OFRP–A–7706 என்ற பதிவெண் கொண்ட இலங்கை நாட்டு மீன்பிடி பைபர் படகு – 1 |

**குறிப்பு:**

1. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கவில்லை.
2. 1 முதல் 8 குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையில் இருந்தார்கள்.
3. வழக்கு முடிவு பற்றி காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.06.25 19:30:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.